மதுரை வடக்கு மாவட்டம் மேற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பரவை பேரூராட்சி ஊர்மெச்சிகுளத்தில் அமைந்துள்ள கோவில்கள் மற்றும் தேவாலயத்திற்கு தி.மு.க. சார்பில் அமைக்கப்பட்ட மேற்கூரையினை மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் கழக நிர்வாகிகள் தனச்செல்வம், வழக்கறிஞர் பாலாஜி, பரவை மனோகரன், ஆர்.கே.ஜெயராமன், சிறைச்செல்வன், வி.பி.திருக்குமரன், பரவை ராசாமணி, என்.எஸ்.மணி, இளைஞரணி அன்புச்செல்வன், பாலசுப்பிரமணியம், துரை சரவணன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள் பங்கேற்றனர்.

தனிப் பெரும்பான்மையுடன் கழகம் வெற்றி பெறும்!

புதுக்கோட்டையில் -மார்ச் 1 ல் பிறந்த 10 குழந்தைகளுக்கு தங்க மோதிரம்!

அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கி பேச்சு!

புதுக்கோட்டை, மார்ச் 10-

புதுக்கோட்டை ராணியார் அரசு மகப்பேறு மருத்துவமனையில் மார்ச் ஒன்றாம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மார்ச் 1ஆம் தேதி பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அன்று பிறந்த 10 குழந்தைகளுக்கு வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் ஏற்பாட்டின் பேரில் தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் தங்க மோதிரங்களை அணிவித்தனர். மேலும் இதில் புதுக்கோட்டை எம்.எல்.ஏ. வை.முத்துராஜா மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில் உள்ளிட்ட பலரும் உடனிருந்தனர்.

அப்போது அமைச்சர் எஸ்.ரகுபதி கூறுகையில்:

அ.தி.மு.க.வில் கூட்டணி பேச்சுவார்த்தைக்கு குறைந்த கட்சி தான் உள்ளது. அவர்கள் கூட்டணியை ஆரம்பித்து பேச்சுவார்த்தையை தொடங்கவில்லை. யார் மேஜர் பார்ட்னர் யார் மைனர் பார்ட்னர் என்ற முடிவும் வரவில்லை.

அதனால் அ.தி.மு.க. கூட்டணியில் தி.மு.க. கூட்டணியையும் ஒப்பிடக்கூடாது. அ.தி.மு.க. கூட்டணி இடியாப்பச்சிக்கல நாங்கள் கூட்டணி சுமூகமாகத்தான் பேசுவோம் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூட்டணியை சரியான பாதையில் கூட்டணியை கொண்டு செல்வார்.

மக்களுக்காக கொடுக்கின்ற பணம்தான். தேர்தல் தேதி அறிவிக்க வில்லை. ஏற்கனவே தமிழ்நாட்டு மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை முடிவு செய்து வைத்திருப்பார்கள் அவர்களுக்குத் தான் வாக்களிப்பார்கள் பணத்தை எல்லாம் கொடுத்து அவரிடம் வாக்குகளை பெற முடியாது. சாதனைகளை செய்து தான் வாக்குகளை வாங்க முடியும் எங்களது சாதனைகளை மக்கள் மனதில் இருக்கின்றது அதன் மூலமாக நாங்கள் வாக்குகள் வாங்க முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. எங்களைப் பொறுத்தவரை இன்றைய சூழ்நிலையில் அ.தி.மு.க.வை டெபாசிட் இழக்க கூடிய சூழ்நிலை சில தொகுதியில் உருவாக்கி இருக்கிறது அதை நாங்கள் நிச்சயம் நிறைவேற்றுவோம்.

பிரதமர் மோடி வேண்டுமென்றால் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமையும் என்று பகல் கனவு காணலாம். எங்களது கனவு உண்மையான கனவு. எங்களது நினைவும் உண்மையான நினைவு. 200 நிச்சயம். வெல்வோம் 200 படைப்போம் வரலாறு அதில் தமிழ்நாடு சரித்திரத்தின் வரலாறாக இருக்கும். நாங்கள் வீடு வீடாக டோர் டோராக பிரச்சாரத்தை தொடங்கி விட்டோம்

இதுவரை இந்திய சரித்திரத்தில் இல்லாத வகையில் தேர்தல் தேதி அறிவிப்புக்கு முன்னரே வீடு வீடாகச் சென்று மகளிர் பரப்புரையை மேற்கொண்டுள்ள ஒரே இயக்கம் தி.மு.க. தான். ஒவ்வொரு வீட்டு வாசலையும் தொட்டு விட்டு வந்திருக்கின்றோம். ஒவ்வொரு வாக்காளரையும் ஒரு முறையல்ல இரு முறை சந்தித்து விட்டு வந்திருக்கின்றோம்.

தி.மு.க.வில் இருக்கின்றவர்கள் மிகச் சிறப்பாக பணியாற்ற கூடியவர்கள் என்று தி.மு.க.வின் தலைமைக்கு நன்றாக தெரியும். அவர்கள் என்றைக்கும் வந்தாரை வரவேற்பவர்கள் அவர்களையும் வாழ வைக்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளவர்கள் தான் தி.மு.க.வில் இருக்கிறார்கள் தவிர அவர்களை எல்லாம் வெறுத்து ஒதுக்க வேண்டும் என்ற எண்ணம் இங்கு கிடையாது.

எங்களைப் பொறுத்தவரை யார் வந்தாலும் அவர்களது தகுதிக்கேற்றவாறு தமிழ்நாடு முதலமைச்சர் எங்கள் கட்சித் தலைவர் எந்த முடிவையும் எடுப்பார் எந்த பதவியையும் கொடுப்பார்.

மதுபான ஊழல் என்று சொல்லி அரவிந்த் கெஜ்ரிவால் மீது வழக்கு போட்டு ஆம் ஆத்மி கட்சியை தேர்தல் நேரத்தில் மிகவும் சிரமப்பட வைத்தனர். ஆட்சி அதிகாரம் தங்கள் கையில் இருப்பதால் பொய்யான ஊழல் குற்றச்சாட்டுகளை சொல்வதில் மிக மிக வல்லமையான கட்சி பாஜகவும் பிரதமர் முடியும் தான். அந்த குற்றச்சாட்டுகளை மக்கள் நம்ப மாட்டார்கள். அவர்கள் போட்ட அனைத்து வழக்குகளுமே அடிபட்டுவிட்டது. இந்த குற்றச்சாட்டையும் இது வரை நிருபிக்கவில்லை யாரையும் குற்றவாளியாக கொண்டு போய் நிறுத்த முடியவில்லை. எங்களைப் பொறுத்தவரை அத்தனை லட்சம் கோடி ரூபாய் ஊழல் செய்து எங்கே கொண்டு போய் வைப்பது. அவருக்கு தான் தெரியும் அவர் பல நாடுகளுக்கு சென்று சொத்துக்களை வாங்கி இருக்கலாம் அம்பானியும் அதன் கையில் வைத்துக் கொண்டு அவர்களது துணையோடு என்ன வேண்டுமென்றாலும் செய்யலாம் அதைப்பற்றி எல்லாம் எங்களுக்கு கவலை இல்லை எங்களை பொறுத்தவரை நாங்கள் யாரும் எந்த தவறும் செய்யவில்லை எந்த நீதிமன்றத்தையும் எந்த வழக்கையும் சந்திப்பதற்கு எப்பொழுதும் தயாராக இருக்கின்றோம்.

குஜராத்திலும் ராஜஸ்தானிலும் மத்திய பிரதேசத்திலேயும் அங்கே எல்லாம் சட்டம் ஒழுங்கை சென்று பிரதமர் மோடி பார்த்துவிட்டு தமிழ்நாட்டில் வந்து சட்டம் ஒழுங்கை பற்றி பேசினால் நன்றாக இருக்கும்.

எங்களைப் பொறுத்தவரை தனி பெரும்பான்மையுடன் வெற்றி பெறுவோம். 118 இடங்களுக்கு மேலே வெற்றி பெற்றால் தனி பெரும்பான்மை தான். எங்களுடைய திமுக 120 இடங்களில் வெற்றி பெற்று விடும் நாங்கள் கூட்டணியை அரவணைத்து செல்பவர்கள். அவர்களுக்கும் தேவையான உதவிகளை செய்து அரவணைத்து செல்வோம். தனிப்பட்ட முறையில் ஆட்சியை பிடிக்க கூடிய அளவிற்கு வெற்றி பெறும்.

இந்த தேர்தலில் எந்த சவாலும் எங்கள் கண்ணுக்கு தெரியவில்லை அதனால் அகம்பாவம் பிடித்து சொல்லக்கூடாது. எது வந்தாலும் நாங்கள் சமாளிப்பதற்கு தயாராக இருக்கின்ற இயக்கம் தான் தி.மு.க. இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

கன்னியாகுமரி மாவட்ட சமத்துவ மக்கள் கட்சி துணை செயலாளர் ராயல் ஜெயசிங் மற்றும் பீமநேரி முன்னாள் ஊராட்சி மன்ற உறுப்பினர் சுபா இவர்களின் ஏற்பாட்டில் தோவாளை கிழக்கு ஒன்றிய செயலாளர் செல்வம் தலைமையில் அ.தி.மு.க மற்றும் சமத்துவ மக்கள் கட்சியை சேர்ந்த 50 க்கு மேற்பட்டவர்கள் அக்கட்சியில் இருந்து விலகி கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் முன்னிலையில் தங்களை தி.மு.கழகத்தில் இணைத்து கொண்டனர். உடன் பொதுக்குழு உறுப்பினர் ஞானபாய், மாவட்ட பிரதிநிதி ரஹ்மான், இம்மானுவேல், கல்யாணசுந்தரம், ஷேக், ஆசீர், மகேஷ், பிரைட், சங்கர நாராயணன், மாதவன் மற்றும் கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஒட்டன்சத்திரம் தொகுதியில்

"வெல்லும் தமிழ் தமிழ்ப் பெண்கள்" பிரச்சாரம் தீவிரம்!

ஒட்டன்சத்திரம். மார்ச். 10.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதியில் பெண்கள் முன்னேற்றம் மற்றும் பொதுமக்கள் நலனை முன்னிலைப் படுத்தி தமிழ்நாடு அரசு பல்வேறு வளர்ச்சி மற்றும் நலத்திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. தமிழ் நாட்டில் பெண்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை வலுப்படுத்தும் நோக்கில் தி.மு.க. அரசு "வெல்லும் தமிழ் பெண்கள் என்ற சிறப்பு விழிப்புணர்வு பிரச்சாரத்தை மாநிலம் முழுவதும் முன்னெடுத்து வருகிறது. இந்த பிரச்சாரம் பெண்களின் திறன், தன்னம்பிக்கை மற்றும் சமூக பங்களிப்பை மேம்படுத்தும் நோக்கில் தொடங்கப்பட்டுள்ளது.

இந்த முயற்சியின் மூலம் பெண்களுக்கு கல்வி, வேலை வாய்ப்பு, சுயதொழில் மற்றும் சமூக உரிமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. குறிப்பாக கிராமப்புறங்களில் வாழும் பெண்களுக்கு அரசு வழங்கும் பல்வேறு நலத்திட்டங்களை பற்றி முழுமையான தகவலை கொண்டு சேர்க்கும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

தமிழ்நாடு அரசு பெண்கள் முன்னேற்றத்தை தனது முக்கியக் கொள்கைகளில் ஒன்றாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. பெண்கள் பொருளாதார ரீதியாக வலுவாக இருக்க வேண்டும் என்பதற்காக பல்வேறு நலத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. குடும்பத் தலைவி பெண்களுக்கு மாதந்தோறும் நிதியுதவி வழங்கும்,கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் பெண்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் முக்கிய திட்டமாகும்.

அதேபோல் மாணவிகளின் கல்வியை ஊக்குவிக்கும் "புதுமைப்பெண் திட்டம் மூலம் உயர் கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதாந்திர உதவித்தொகை வழங்கப்படுகிறது. இது பல ஏழை மற்றும் நடுத்தர குடும்பங்களை சேர்ந்த மாணவிகள் கல்வியை தொடர உதவியாக உள்ளது. மேலும் அரசு பேருந்துகளில் பெண்களுக்கு விடியல் பயண வசதியும் வழங்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் பெண்கள் கல்வி மற்றும் வேலைக்காக சுதந்திரமாக பயணம் செய்ய உதவுகிறது.

பெண்கள் சுயஉதவி குழுக்கள் மூலமாக சிறு தொழில்களை தொடங்க அரசு கடன் உதவிகள் மற்றும் தொழில் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் பல பெண்கள் தங்களுக்கே தொழில் தொடங்கி குடும்பத்தின் பொருளாதார நிலையை மேம்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் ஒட்டன்சத்திரம் தொகுதியில் பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொகுதி முழுவதும் சாலை வசதிகளை மேம்படுத்த பல்வேறு பணிகள் செய்யப்பட்டுள்ளன. கிராமப்புறங்களில் பழைய சாலைகள் புதுப்பிக்கப்பட்டு புதிய சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் கிராம மக்கள் போக்குவரத்து வசதி மேம்பட்டுள்ளது.

மேலும் மழைக்காலங்களில் நீர் தேங்காமல் இருக்க வடிகால் வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நகர்ப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் சாலை மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கிராமங்களுக்கு புதிய குடிநீர் குழாய்கள் அமைத்தல், மேல் நிலை நீர்த் தொட்டிகள் கட்டுதல் மற்றும் பழைய நீர்வழங்கல் அமைப்புகளை புதுப்பித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் மூலம் பல கிராமங்களில் குடிநீர் பிரச்சனை குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வித் துறையிலும் தொகுதியில் பல்வேறு முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அரசு பள்ளிகளில் புதிய கட்டிடங்கள் கட்டுதல், கூடுதல் வகுப்பறைகள் அமைத்தல் மற்றும் பள்ளி வளாகங்களை மேம்படுத்துதல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. மாணவர்களுக்கு இலவச பாடப்புத்தகங்கள், சீருடைகள் மற்றும் கல்வி உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு அரசு பல்வேறு உதவித் திட்டங்களையும் வழங்கி வருகிறது. இதன் மூலம் மாணவர்கள் கல்வியில் முன்னேறுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன.

பொதுமக்களின் சுகாதாரத்தை மேம்படுத்த அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மருத்துவ உபகரணங்கள் புதுப்பிக்கப்பட்டு மருத்துவ சேவைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. மேலும் பொதுமக்களுக்கு தரமான சிகிச்சை வழங்க கூடுதல் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்களும் நியமிக்கப் பட்டுள்ளனர்.

பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனை கருத்தில் கொண்டு பல்வேறு சமூக நலத்திட்டங்களும் தொகுதியில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பெண்கள் சுயஉதவி குழுக்களுக்கு கடன் உதவி வழங்கப்பட்டு அவர்கள் சிறு தொழில்களை தொடங்க ஊக்குவிக்கப்படுகின்றனர். இது பெண்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் உதவியாக உள்ளது.

மேலும் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு பயிற்சிகள், விவசாயிகளுக்கான உதவித்திட்டங்கள் மற்றும் சமூக பாதுகாப்பு திட்டங்களும் தொகுதி மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து தொகுதி முழுவதும் சமமான வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசு தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், எதிர்காலத்தில் மேலும் பல வளர்ச்சி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தொகுதியில் 5ஆண்டு ஆட்சிக்காலத்தில் ரூ.940 கோடியில் காவிரி கூட்டு குடிநீர் திட்டம், ரூ.24 கோடியில் அரசு மருத்துமனை, ரூ.124 கோடியில் 912 அடுக்குமாடி குடியிருப்புகள், 15000பயணாளிகளுக்கு விலையில்லா வீட்டு மனை பட்டா,

ரூ 2 கோடியில் கால்நடை மருத்துவமனை,

ரூ.5 கோடியில் குளிர்பான கிடங்கு,ரூ. 22 கோடியில் கலைஞர் நூற்றாண்டு காய்கறி மார்க்கெட்,ரூ.14 கோடியில் பேருந்து நிலையம் விரிவாக்கம், வாகரையில் மக்காச்சோள ஆராய்ச்சி மையம், 7 கோடியில் குப்பைகள் தரம் பிரிக்கும் மையம், விருப்பாச்சி அரசு தொழிற்பயிற்சி நிலையம், ரூ.22 கோடியில் அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி, அரசு ஆண்கள் கலைக் கல்லூரி, ரூ.14 கோடியில் தானியங்கி உயரும் படிக்கட்டுடன் கூடிய நடைமேம்பாலம், ரூ. 75 கோடியில் 13 புதிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், உள்ளிட்ட பல்வேறு சொல்லாத பல வாக்குறுதிகளையும் நிறைவேற்றப்பட்டுள்ளது இதுகுறித்து உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி கூறியதாவது.

தி. மு. க ஆட்சிகாலத்தில் பெண்கள் முன்னேற்ற மும் மக்கள் நலமும் இணைந்தால்தான் சமூக முன்னேற்றம் சாத்தியமாகும் பெண்கள் கல்வி, தொழில் மற்றும் சமூகச் செயல்பாடுகளில் முன்னேற வேண்டும் என்பதே அரசின் முக்கிய நோக்கமாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

"வெல்லும் – தமிழ்ப் பெண்கள் பிரச்சாரம் பெண்களின் திறமை யையும் ஆற்றலையும் வெளிப்படுத்தும் முக்கிய முயற்சியாக இருப்பதாகவும், இந்த முயற்சியின் மூலம் பெண்கள் தன்னம்பிக்கையுடன் சமூகத்தில் முன்னேறுவார்கள் என்ற நம்பிக்கை இருப்பதாகவும், பெண்கள் முன்னேற்ற மும் தொகுதி வளர்ச்சியும் இணைந்து சமூக முன்னேற்றத்தை உருவாக்கும் வகையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும், மக்கள் நலனை முன்னிலைப்படுத்தி அரசு தொடர்ந்து பணியாற்றி வருவதாகவும் கூறினார் .

இனமானப் பேராசிரியர் அவர்களின் 6 ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நெல்லை கிழக்கு மாவட்ட அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பேராசிரியர் அவர்களின் திருஉருவப்படத்திற்கு நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.நிகழ்வில் களக்காடு நகர செயலாளர் மணி சூரியன், பொறுப்புக்குழு உறுப்பினர் ஆதிபாண்டி,கவுன்சிலர்கள் கோபி. கோபால கண்ணன்,முருகன், சின்னத்துரை,களக்காடு சோமசுந்தரம்,பணகுடி எட்வின் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அம்பாள் வித்யாலயா பள்ளி மைதானத்தில் விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதியில் சிறப்பான முறையில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்களில் பணியாற்றிய மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கான பாராட்டு விழாவில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ.வி. மார்க்கண்டேயன் கலந்து கொண்டு சிறப்பாக பணியாற்றிய மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் துறை சார்ந்த அதிகாரிகள் அனைவரையும் பாராட்டி உரையாற்றினார். நிகழ்வில் கோவில்பட்டி மாவட்ட சுகாதார அலுவலர் டாக்டர்.வித்யா விஸ்வநாதன், விளாத்திகுளம் அரசு மருத்துவமனை மருத்துவர் டாக்டர்.சுரேஷ், குழந்தைகள் நல மருத்துவர் டாக்டர். தேவி ஸ்ரீ, விளாத்திகுளம் பேரூராட்சி செயல் அலுவலர் சுப்பிரமணியன், ராமசுப்பு, அன்புராஜன், ராதாகிருஷ்ணன், செல்வராஜ், காசிவிசுவநாதன், உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.